## <u>நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்களின் நடவடிக்கைகள்</u>

## <u>முன்னிலை: திரு. சி.பாஸ்கரத்தொண்டைமான்</u>

<u>ந.க.எண்.1000/2017/விம</u>      <u>நாள்:[illegible].02.2018</u>

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – விழுப்புரம் மண்டலம் – கடலூர் மாவட்டம் – குறிஞ்சிப்பாடி வட்டம் – குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம் – கீழூர் ஊராட்சி – கீழூர் கிராமம் – சர்வே எண்கள்.4/21A, 4/21B, 4/21C, 4/22A, 4/22B- ஆகியவற்றில் அமையும் 11.34 ஏக்கர் (அ) 493970.40 ச.அடி கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள சாந்தி நகர் – மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடம் கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்டது – திருத்தி அமைக்கப்பட்டு ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

படிக்க:

1) அரசாணை எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள்:04.05.2017
2) அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள்:13.10.2017
3) மனுதாரர் திரு. S.V. பழனி, திருமதி.சாந்தி, ஆகியோர்களின் விண்ணப்பம் நாள்:21.08.2017
4) இவ்வலுவலக நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.1000/2017/விம நாள்:26.10.2017
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guidelines) ந.க.எண்.13193/2017/LA2 நாள்:30.10.2017, 31.10.2017 மற்றும் 07.11.2017

----

<u>உத்திரவு:</u>

பார்வை (1) மற்றும் (2)ல் காணும் அரசாணைகளின்படி பார்வை (4)ல் காணும் இவ்வலுவலக நடவடிக்கை கடிதத்தில் கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்தினை பார்வை (5)ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயல்முறை வழிகாட்டுதலின்படி திருத்தி அமைக்கப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், கீழூர் ஊராட்சி, கீழூர் கிராமம், சர்வே எண்கள்.4/21A, 4/21B, 4/21C, 4/22A, 4/22B- ஆகியவற்றில் அமையும் 11.34 ஏக்கர் (அ) 493970.40 ச.அடி கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள சாந்தி நகர் என்ற மனைப்பிரிவிற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ.(வி.ம)எண்.100/2017-ஐ திருத்திய அமைக்கப்பட்டு <u>**கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ.(வி.ம)எண்.66/2018**</u> என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

# மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | – | 11.34 ஏக்கர் (அ) 493970.40 ச.அடி |
| மொத்த மனைகள் | – | 307 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | 60 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | 247 |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு | – | 266505.00 ச.அடி |

## பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சியால் தன்னிச்சையாக பெறப்பட வேண்டியது)

| ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு | சதவீதம் |
|---|---|---|
| பூங்கா ( மனை எண்.245முதல் 256 வரை மற்றும் 302 முதல் 307 வரை) | 28544.01 ச.அடி | ---- 10.70% |

## செலுத்தப்பட்ட கட்டண விபரம்:

**கூராய்வு கட்டணம்**: மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் மனைப்பிரிவில் அமையும் விற்பனை செய்யப்படாத 247 மனைகளுக்கு மனைப்பிரிவு உரிமையாளரால் கூராய்வு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

## செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரங்கள்:

1) **கூராய்வு கட்டணம்:** மனைப்பிரிவில் உள்ள ஒவ்வொரு மனைக்கும், மனை ஒன்றுக்கு ரூ.500/– வீதம் கூராய்வு கட்டணம் (Scrutiny Fees) **www.tnlayoutreg.in** இணையதள முகவரியில் Online மூலம் மனை/மனைப்பிரிவு உரிமையாளரால் செலுத்தப்பட்ட விபரம் உறுதி செய்துகொள்ளப்பட வேண்டும்.

   மேலும், விற்பனை செய்யப்பட்ட 60 மனைகளுக்கு தனி மனை உரிமையாளர்களால் கூராய்வு கட்டணம் செலுத்தப்பட்டதற்கான Registration Slip–ன் நகல் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

2) **வரன்முறைப்படுத்துதல் கட்டணம் (Regularisation Charges)**: ஒவ்வொரு மனையின் பரப்பிற்கேற்ப ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/– வீதம் கீழ்க்கண்ட அரசு கணக்கு தலைப்பில் வரன்முறை கட்டணம் மனை/மனைப்பிரிவு உரிமையாளரால் செலுத்தப்பட வேண்டும். மேலும், தொகை செலுத்தப்பட்ட விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

### Head of Account:

0217 – Urban Development 60 – Urban Development scheme
800– Other receipts AT– Receipts under **Regularisation Charges** of Unapproved layouts and plots - DTCP
(DPC: 0217-60-800-AT-0007)

3) <u>வளர்ச்சி கட்டணம்</u>: ஒவ்வொரு மனையின் பரப்பிற்கேற்ப ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/—வீதம் மனை/மனைப்பிரிவு உரிமையாளரிடமிருந்து பெற்று உள்ளாட்சி தனிக்கணக்கில் வரவு வைக்க வேண்டும். இந்நிதியினை வேறு பயன்பாடு எதற்கும் பயன்படுத்துதல் கூடாது.

4) கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் பார்வை (2)ல் காணும் அரசாணையின்படி உள்ளாட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது.

5) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு அனைத்து கட்டணங்களும் முழுமையாக மனை உரிமையாளர்களால் செலுத்தப்பட்ட பின்னரே, தனி மனை/மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி உத்தரவு உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் — 2 நகல்கள்

28/2/2018

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மண்டலம்,
விழுப்புரம்.

28/2/2018

<u>பெறுநர்</u>
வட்டார வளர்ச்சி அலுவலர்,
குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம்,
குறிஞ்சிப்பாடி வட்டம்,
கடலூர் மாட்டம்.

<u>நகல்:</u>

1) திரு.S.V. பழனி மற்றும் திருமதி.சாந்தி,
30, காந்தி கிராமம்,
காந்திநகர் அஞ்சல்,
குறிஞ்சிப்பாடி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

2) உதவி இயக்குநர் (நில அளவை)
கடலூர் மாவட்டம்.

3) வட்டாட்சியர்,
குறிஞ்சிப்பாடி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

(2, 3) — சாலை மற்றும் பூங்கா பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.

4) சார்பதிவாளர்,
குறிஞ்சிப்பாடி சார்பதிவாளர் அலுவலகம்,
கடலூர் மாவட்டம்.

— சாலை மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு

6

குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கிஊ) / தனி அலுவலர்
கீழூர் ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை. திரு.கு.அசோக்பாபு

ந.க.எண்.ஆ2/2795/2017 நாள். 30 .07.2018

பொருள்:— அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 — ஊராட்சி ஒன்றியம் குறிஞ்சிப்பாடி — கீழூர் ஊராட்சி — கீழூர் கிராமம் — ச.எண் 4 / 21A, 4/21B, 4/21C, 4/22A, மற்றும் 4/22B, ஆகியவற்றில் அமையும் 11.34 ஏக்கர் (அ) 493970.40 சதுர.அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள சாந்தி நகர் — மனைப்பிரிவு வரன்முறைபடுத்தி ஒப்புதல் வழங்குதல் — தொடர்பாக.

பார்வை:—
1. மனுதாரர் திருமதி.P.சாந்தி மற்றும் . S.V.பழனி, காந்தி நகர், என்பவரது விண்ணப்பம் நாள்.
2. அரசாணை எண் 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD(3)) துறை நாள் 04.05.17
3. அரசாணை எண்172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD(3)) துறை நாள் 13.10.17 .
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண்.1000/2017 விம நாள்.28.02.18.
5. வடலூர் — சார் பதிவாளர் அலுவலக பத்திர எண் : 1273/18

❖❖❖❖

உத்தரவு

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், கீழூர் கிராமம், 4 / 21A, 421B, 4/21C, 4/22A, மற்றும் 4/22B, ஆகியவற்றில் 11.34 ஏக்கர் (அ) 493970.40 சதுரஅடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள சாந்தி நகர் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர் அவர்களால் கொ.ஒ.ம./ந.ஊ.இ.(வி.ம) எண் 66/2018 என எண்ணிடப்பட்டு பார்வை 4—ல் காணும் உத்தரவு வாயிலாக கொள்கைபளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது இடங்களை மனுதாரர் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் / கீழூர் ஊராட்சி தனி அலுவலர் பெயருக்கு தானமாக அளிக்கப்பட்டு வடலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு எண்.1273/18 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவில் விற்பனை செய்யப்படாத 226 மனைகளின் பரப்பளவான 266505 ச.அடி —க்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணமாக ச.மீ—க்கு ரூ.30.00 வீதம் மற்றும் வளர்ச்சி கட்டணமாக ச.மீ—க்கு ரூ.25.00 வீதம் பின்வரும் விபரப்படி மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

| மனை எண் | சர்வே எண் | பரப்பளவு | சதுர மீட்டருக்கு வரன்முறை கட்டணம் ரூ.30/— வீதம் | சதுர மீட்டருக்கு வளர்ச்சி கட்டணம் ரூ.25/— வீதம் |
|---|---|---|---|---|
| 6,7, 12to17, 19 to37, 42 to46, 49to54, 59, 61to76,79, 83to102, 107to129, 132to152, 159to175, 180, 182,183, 186to195 196to205, 209to236, 241to243, 258to260, 263to281, 283to285, 287to294, 299,300 | 4 / 21A, 421B, 4/21C, 4/22A, மற்றும் 4/22B, | 266505 ச.அடி (அ) 24759.13 சதுர.மீ | ரூ.663450/— (குறிஞ்சிப்பாடி கிளை கருவூலத்தில் செ.சீ.எண் 1 / 24.07.18 மற்றும் ரூ.79324 செ.சீ.எண் 33 / 25.07.18 மூலம் செலுத்தப்பட்டுள்ளது) மொத்தம் ரூ.742774/— | ரூ.552875 (இந்தியன் வங்கி, கோயம்பேடு கிளை வங்கி வரைவு எண்.679701 நாள்.23.07.18 மற்றும் ரூ.66103 /— இந்தியன் வங்கி, குறிஞ்சிப்பாடி கிளை வங்கி வரைவு எண்.034295 நாள்.25.07.18 மூலம் மொத்தம் ரூ.618978/— குறிஞ்சிப்பாடி வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (கிஊ) —க்கு செலுத்தப்பட்டுள்ளது) |

மேலும் மேற்படி மனைப்பிரிவை வரன்முறைபடுத்துதலை அங்கீகரித்து கீழூர் ஊராட்சி தீர்மானம் எண். 45/2018மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறிஞ்சிப்பாடி வட்டம் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், கீழூர் கிராமம், ச.எண். 4 / 21A, 421B, 4/21C, 4/22A, மற்றும் 2/22B, ஆகியவற்றில் உள்ளடக்கிய 11.34 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள சாந்தி நகர் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர் அவர்களால் கொ.ஒ.ம./ந.ஊ.இ.(வி.ம) எண்.66/2018 என எண்ணிடப்பட்டு கொள்கைபளவில் பார்வை 4-ல் காணும் உத்தரவு மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டவாறு மற்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு சாந்தி நகர் மனைப்பிரிவை வரன்முறைப்படுத்தி இறுதி அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு விற்பனை செய்யப்படாத 226 மனைகளுக்கு மட்டும் பொருந்தும். மற்றும் ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட மனைகளை வரன்முறைப்படுத்திட மனை உரிமையாளர்கள் தனியாக விண்ணப்பத்திட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – 1. வரைபடம்

2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண்.1000/2017 விம நாள்.28.02.18. வழங்கப்பட்ட ஒப்புதல் மற்றும் நிபந்தனைகள்

வட்டார வளர்ச்சி அலுவலர்(கிஊ),
குறிஞ்சிப்பாடி மற்றும்
தனி அலுவலர் கீழூர் ஊராட்சி

பெறுதல்

திரு. S.V.பழனி மற்றும் திருமதி.சாந்தி,
30.காந்தி கிராமம்,
காந்தி நகர் அஞ்சல்,
குறிஞ்சிப்பாடி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

நகல்

1. மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர் (ஊ) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
4. வட்டாட்சியர், குறிஞ்சிப்பாடி தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
5. சார் பதிவாளர், வடலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.